சுற்றுலாப் பயணிகள் விரும்பும் மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவதே நோக்கம்!

பல்வேறு மாநில சுற்றுலாத் துறைகள் – சுற்றுலா நிறுவனங்களை ஒருங்கிணைத்து

தமிழ்நாடு சுற்றுலா பயணச் சந்தை சென்னையில் நடத்தப்படும்!

பேரவையில் அமைச்சர் கா. ராமச்சந்திரன் பதிலுரை !

சென்னை, ஜூன் 30-

பல்வேறு மாநில சுற்றுலாத்துறைகள் மற்றும் புகழ்பெற்ற சுற்றுலா நிறுவனங்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு சுற்றுலா பயணச் சந்தை சென்னையில் நடத்தப்படும் என்று பேரவையில் சுற்றுலாத் துறை மானியத்தில் பதிலளித்துப் பேசியபோது அமைச்சர் கா.ராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமசந்திரன் பேசியதாவது:-

பகுத்தறிவுப்பகலவன், சுயமரியாதைச் சுடர், சமூக நீதிக் காவலர் தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். தந்தை பெரியார் வழியில் தமிழ்நாட்டை வழிநடத்திய பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன்.

அண்ணாவின் அன்புத் தம்பி, மாநில சுயாட்சி நாயகர், குறள் தந்தவர்க்கு வள்ளுவர் கோட்டம் மற்றும் கன்னியாகுமரியில் சிலையும் நிறுவி, தமிழுக்குப் பெருமை சேர்த்தவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை நிறுவியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஓய்வெடுக்கும் இடம் நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்றத் தோழர் பேராசிரியர் பெருந்தகை அவர்களை நினைந்து வணங்குகிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியான முரசொலி மாறன் அவர்களை நினைவில் ஏற்றிப் போற்றுகிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், ஆகியோரின் வழியில் சமூக நீதி நாளுக்கு வித்திட்டவர். தனது திறன்மிகு ஆட்சியால் தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்றெடுத்தவர், தமிழகத்தில் பொறுப்பேற்ற நாள் முதல், அனைத்துத் தேர்தல்களிலும் இடைவிடாத் தொடர் வெற்றிக் கண்டவர். தற்போது நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது என்று வெற்றிபெற்று நூற்றுக்கு நூறு நாயகராய், திராவிட மாடல் ஆட்சிக்கே வித்திட்டவராய் விளங்கும் நமது முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். கழக இளைஞர் அணிச் செயலாளரே! கழகத் தலைவரின் செயல் வடிவமே!

“மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவரின் குரலாகப் பிரதிபலித்தவர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சின்னவர் அவர்களை வணங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களையும், அவை முன்னவர் அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும் வணங்குகின்றேன். அனைத்துக் கூட்டணிக் கட்சிகளின் சட்டமன்றக் குழுத் தலைவர்கள் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரையும் வணங்கி, இம் மாமன்றத்தில் சுற்றுலாத் துறையின் மானியக் கோரிக்கை மீதான எனது பதிலுரையை வழங்குகின்றேன்.

சுற்றுலா வரும் வகையில் மக்களை ஊக்கப்படுத்துவதே சுற்றுலா ஆகும். வழக்கமான வாழ்வியலில் இருந்து இணக்கமான வாழ்வியல் தலங்களில் பயணிப்பதன்மூலம் முக மலர்ச்சிக்கும், மன மகிழ்ச்சிக்கும் வழி வகுப்பதே சுற்றுலா. வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் அன்னியச் செலாவணியை ஈட்டுவதில் சுற்றுலாத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. மிகப் பழமை வாய்ந்த 36,626க்கும் மேற்பட்ட கோவில்கள் நமது தமிழ்நாட்டில் இருக்கின்றன. 5 தேசிய பூங்காக்கள், 20 வன விலங்கு சரணாலயங்கள், 5 புலிகள் காப்பகங்கள், 17 பறவைகள் சரணாலயங்கள், 5 வகை நிலங்கள், யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட 6 பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் மற்றும் யானைக் காப்பகங்கள் போன்றவற்றை ஒருங்கே பெற்ற மாநிலம் நமது தமிழ்நாடு.

முதலமைச்சர், திராவிட நாயகர் அவர்களால் 26-9-2023 அன்று “தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை2023” வெளியிடப்பட்டது. இக்கொள்கை சுற்றுலாத் துறை வளர்ச்சியின் முக்கிய மைல் கல்லாகும். இதுவே தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க முதல் சுற்றுலாக் கொள்கை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு சுற்றுலா கொள்கையில் சுற்றுலாத் துறைக்கு “தொழில் துறை” எனும் சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுற்றுலாத் துறையில் தனியார் துறையின் பங்களிப்பின் (PPP Mode) மூலம் முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில், சாகசச் சுற்றுலா, பொழுது போக்குச் சுற்றுலா, மலைத் தோட்டப் பயிர்ச் சுற்றுலா, கலாச்சாரச் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா, கேரவன் சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா, திரைப்படச் சுற்றுலா உள்ளிட்ட 12 முன்னுரிமைச் சுற்றுலாப் பிரிவுகள் சுற்றுலா வளர்ச்சிக்காக செயல்படுகின்றன.

சுற்றுலாத் துறையில் முதலீடு செய்வோருக்கு முன்னுரிமை அடிப்படையில், முதலீட்டு மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், கட்டமைப்பு ஊக்கத்தொகை, மின் பயன்பாட்டில் கட்டணச் சலுகைகள் போன்றவை வழங்கப்பட உள்ளன. சுற்றுலாத் துறையின் திட்டங்களுக்கு ஒற்றை சாளர முறையில் அனுமதி வழங்கப்பட உள்ளன. கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு 3D லேசர் தொழில்நுட்பம்மூலம் ஒளியூட்டுதல், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி, பூம்புகார், கரூர் மாவட்டம் பொன்னனியாறு, முதலியார் குப்பம், பிச்சாவரம், குற்றாலம், ஜவ்வாது மலை, கொல்லி மலை, உதகைப் படகுக் குழாம், புதுக்கோட்டை மாவட்டம் முத்துகுடா, திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி, தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் மற்றும் வத்தல்மலை உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களில் ரூ.123.30 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாப் பணிகள் நடைபெறுகின்றன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கீழக்கரை கிராமத்தில் 16 ஏக்கர் பரப்பளவில் தமிழர்களின் வீர விளையாட்டாகத் திகழும் ஜல்லிக்கட்டிற்கு ரூ.62.77 கோடி மதிப்பீட்டில் “கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம்” கட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் 24-1-2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

இந்த அரங்கம் தமிழ்நாட்டுக் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் பாரம்பரிய விளையாட்டுகளைப் பிரபலப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் உருவாக்கப்பட்டதாகும். தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தனுஷ்கோடி, ஏற்காடு புதிய காட்சிமுனை அமைத்தல், சித்தன்னவாசல், மாத்தூர் தொட்டிப் பாலம், கங்கைகொண்ட சோழபுரம், மணிமுத்தாறு அணை ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக நாடுகளிலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக வருவோருக்கு தமிழ்நாடு, குறிப்பாக சென்னை மாநகர் அதிநவீன மருத்துவச் சிகிச்சைகளுக்கான வசதி வாய்ப்புகளை வழங்கி வருகிறது. இதனை மேலும் மேம்படுத்த தமிழ்நாடு சுற்றுலாத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையுடன் இணைந்து, மருத்துவம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலா மாநாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 29-4-2023 அன்று சென்னையில் நடைபெற்றது. இதில் “Tamil Nadu - Where the world comes to heal” எனும் நூலையும் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். இம்மாநாட்டில் 21 நாடுகளைச் சேர்ந்த 75க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதுவே தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட முதல் மருத்துவச் சுற்றுலா மாநாடு ஆகும்.

ஒரு நாள் திருப்பதி சுற்றுலா மற்றும் பிற சுற்றுலாத் தலங்களுக்கு சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்ல தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ரூ.2.92 கோடி மதிப்பீட்டில் 2 குளிர்சாதன வால்வோ பேருந்துகள் வாங்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29-11-2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தற்போது மேலும் 5 சொகுசுப் பேருந்துகள் வாங்கப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு வர உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 2022 ஆம் ஆண்டு 21.89 கோடியாக இருந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டு கடந்த ஆண்டில் 28.71 கோடியாக பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவை அனைத்துமே முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலாலும், ஊக்கத்தாலும்தான் சாத்தியப்பட்டன என்பதை இப்பேரவையில் பெருமையோடு பதிவு செய்கிறேன்.

2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டு பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக்க முதலமைச்சர் அவர்கள், இலக்கை நிர்ணயித்து உள்ளார்கள். இதனை எய்திட அன்னியச் செலாவணியை ஈர்த்திட சுற்றுலாத் துறை முனைப்புடன் இயங்கி வருகிறது என்பதை உறுதியுடன் தெரிவித்து மகிழ்கிறேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் செயல்பாட்டால் இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக தமிழ்நாடு உருவாகி வருகிறது. எனவேதான், விளையாட்டுச் சுற்றுலாவை (Sports Tourism) மேம்படுத்த சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையின்மூலம், இந்திய நாட்டிய விழா, பொங்கல் விழா, சென்னை விழா, கோடை விழாக்கள், உலகச் சுற்றுலா தின விழா, சர்வதேச பட்டம் திருவிழா, சர்வதேச பலூன் திருவிழா போன்ற விழாக்களின்மூலம் தமிழ்நாட்டின் கலைப் பண்பாடு, பாரம்பரியம் பாதுகாக்கப்படுகின்றன.

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு திருவிழாவினை காண்பதற்கு அதிகமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். சுற்றுலா தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த சுற்றுலாத் துறை மூலம் 18 பிரிவுகளில் 54 விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, சுற்றுலாத் துறையில் ஜப்பான் மற்றும் ஜெர்மன் போன்ற சர்வதேச நாடுகளில் இருந்து சிறந்த சுற்றுலாத் தலத்திற்கான விருதினை கடந்த ஆண்டு பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், 1971ல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் விடுதி, உணவகம், படகுக் குழாம், தொலைநோக்கி இல்லம், சுற்றுலா பொருட்காட்சி போன்றவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய செயல்பாடுகளாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் செயல்பாட்டால், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குறுகிய காலத்திலேயே அதிகமான இலாபத்தை ஈட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.29.99 கோடியாக இருந்த இலாபம், 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.31.50 கோடி இலாபம் ஈட்டியுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உணவு மற்றும் பானத்தின் விற்பனையை மேம்படுத்துவதற்காக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படியே “அமுதகம்” என வணிகப் பெயரில் செயல்பட்டு வருகிறது.

2023-2024ஆம் நிதியாண்டில் படகுக் குழாம்மூலம் ரூ.33.88 கோடியும், தொலைநோக்கி இல்லங்கள்மூலம் ரூ.5.75 கோடியும், நீலக்கொடி கடற்கரை மூலம் ரூ.3.08 கோடியும், பேருந்துகளில் பயணம் செய்த சுற்றுலாப் பயணிகள்மூலம் ரூ.35.64 கோடியும் வருவாய் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒரு நாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரகச் சுற்றுலா, 4 நாட்கள் அறுபடை வீடு சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்குக் கடற்கரைச் சுற்றுலா போன்றவை மிகவும் புகழ்பெற்றவையாக உள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்கீழ் 9 படகு குழாம்கள் இயங்கி வருகின்றன. தற்போது முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளால் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரித்ரா நதி கோவில் குளம், ஈரோடு மாவட்டம், அந்தியூர் பெரிய ஏரி மற்றும் திருப்பூர் மாவட்டம், ஆண்டிப்பாளையம் ஏரி ஆகிய மூன்று இடங்களில் புதியதாக படகு குழாம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரும்.

சுற்றுலா வருவோர் எல்லாம் வெற்றி விழா என்று கருதும் அளவுக்கு உரிய முறையில் விருந்தினர்கள்போல் உபசரிக்கப்பட்டு, மனமகிழ்வுடன் செல்கின்றனர். ஆகவே உள்நாட்டுச் சுற்றுலா பயணிகளுக்கு மட்டுமன்றி, வெளிநாடுகளில் இருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கும் உவகையும், உற்சாகமும் ஊட்டக்கூடிய மிகச் சிறந்த வளமிக்க சேவைகளைத் தமிழ்நாடு சுற்றுலாத் துறை வழங்கி வருகிறது.

அறியாமை இருள் போக்கி, அறிவொளி ஊட்டிய தந்தை பெரியாரின் பாதையில், பேரறிஞர் பெருந்தகை அண்ணா நடத்திக் காட்டிய வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கொடுத்த நெறிமுறையின் தடத்தில், உலகத் தமிழ்ப் பேரினத்தின் ஒப்பற்ற தலைவராம், நமது முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படியும், அமைச்சர் பெருந்தகை, சின்னவரின் உள்ளன்போடுகூடிய ஊக்குவிப்பாலும் சுற்றுலாத் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதனை பெருமையுடன் பதிவு செய்து உரையை நிறைவு செய்கிறேன்.

மேலும், இத்துறையின் வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கிய அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அவர்களுக்கும், முதலமைச்சரின் செயலாளர்கள் முருகானந்தம், உமாநாத், சண்முகம், திருமதி அனு ஜார்ஜ் ஆகியோருக்கும், முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர் தினேஷ்குமார் அவர்களுக்கும், நிதித் துறை முதன்மைச் செயலாளர் உதயசந்திரன் அவர்களுக்கும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் டாக்டர் மணிவாசன், அவர்களுக்கும், தமிழ்நாடு சுற்றுலாத் துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் சமயமூர்த்தி அவர்களுக்கும், சுற்றுலாத் துறையில் பணியாற்றும் அனைத்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொது மேலாளர் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும், இந்த வாய்ப்பினை வழங்கிய குன்னூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், நீலகிரி மாவட்ட மக்களுக்கும், இந்த தருணத்தில் நன்றியைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறை சார்பாக இரண்டு பேர் தான் பேசினார்கள். அதில் முக்கியமாக, கடலூர் மாவட்டத்தில் வீராணம் ஏரி குறித்து, நம்முடைய திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள் கூறினார்கள். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தாலுகா, சேத்தியாத்தோப்பு அருகாமையில் வீராணம் ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரி நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

வீராணம் ஏரி பொதுமக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கி வருவதால் அங்கே boat இயக்கிட அனுமதியில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, வீராணம் ஏரியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள நீர்வளத் துறையுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

அதேபோன்று, உறுப்பினர் பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் உரையாற்றியபோது குறிப்பிட்ட, தென்காசி மாவட்டம், கடையம் ஒன்றியம், பொட்டல் புதூர் தர்கா தனியார் நிருவாகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது. அங்கு, 2008 ஆம் ஆண்டு சுற்றுலா துறை சார்பாக வளர்ச்சித் திட்டங்கள் செய்து தரப்பட்டன. ஆனால், அரசாணை எண் 155, நாள் 3-11-2021-ன்படி புதிதாக வெளியிடப்பட்ட ஒரு orderல் சுற்றுலா தல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தனியார் நிருவாகத்தால் நிருவகிக்கப்படும் இடங்களில் எந்தத் திட்டத்தையும், மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அதை செய்ய முடியாத நிலை உள்ளது.

மாமன்ற உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 97 வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள். அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் படித்துப் பார்த்தேன். இந்த வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலும், எனது பதிலுரையிலும் பல விரிவான விளக்கங்களை நான் தந்துள்ளேன். அதிகமாக உறுப்பினர்கள் சுற்றுலாத் தலத்தை மேம்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடங்கள் எந்தெந்த துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதோ, அந்தந்த துறையிலிருந்து N.O.C. வாங்கிக் கொடுத்து, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரைகளுடன் இந்தத் துறைக்கு அனுப்பினால், மிக நிச்சயமாக அதனை ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்
சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள்

அரியலூர் மாவட்டத்தில் ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயப் பகுதி, சிவகங்கை மாவட்டம் பிரான்மலை பகுதி, திருநெல்வேலி மாவட்டம் விஜயாபதி மற்றும் தெற்கு கள்ளிக்குளம் தேவாலயப்பகுதி, தூத்துக்குடி மாவட்டத்தில் சமணர் படுகை மற்றும் தமிழ்நாட்டின் எல்லோரா என்று அழைக்கப்படும் கழுகுமலை ஆகிய வழிபாட்டு சுற்றுலாத் தலங்களில் ஊரணி மேம்பாடு, அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல், மின்விளக்கு வசதிகள், திடக் கழிவு மேலாண்மை, குடிநீர் வசதி போன்ற பணிகள் ரூ.8.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தல்

அழகிய மலைப் பகுதியின் இயற்கை அழகை இரசிப்பதற்கும் அங்குள்ள அருவியில் குளித்து மகிழ்வதற்கும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். திண்டுக்கல் மாவட்டத்தில், புல்லாவெளி அருவி, கொட்டுவரை அருவி மற்றும் கோட்டை நங்காஞ்சியாறு அணைப் பகுதி, மதுரை மாவட்டத்தில், சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக விளங்கும் குட்லாடம்பட்டி அருவி மற்றும் திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள புளியஞ்சோலை அருவி பகுதிக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு அணுகு சாலை, சிமெண்ட் சாலை, குடிநீர் வசதி, நடைபாதை, அருவியில் குளியல் மேற்கொள்ளும் இடத்தில் பாதுகாப்பு கைப்பிடிகள் போன்ற அடிப்படை வசதிகள், உடை மாற்றும் அறைகள், திடக்கழிவு மேலாண்மை, தகவல் பலகைகள், முதலுதவி வசதி, பூங்கா அமைத்தல் போன்ற பணிகள் ரூ.10.20 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள்

பல்வேறு ஆன்மீகத் தலங்களைக் கொண்ட இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள தொண்டி கடற்கரை நகரம், கன்னியாகுமரியில் சூரிய காட்சிமுனை, முக்கிய கடற்கரைகளான சங்குதுறை, சொத்த விளை கடற்கரை பகுதி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் வரலாற்று புகழ் பெற்ற காயல்பட்டினம் கடற்கரை பகுதிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் நடைபாதை அமைத்தல், அமரும் இருக்கைகள், அடிப்படை வசதிகள் போன்ற பல்வேறு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ஆகியன ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

படகு குழாம்
இதர சுற்றுலா பணிகள்

மாம்பழம் உற்பத்தியில் முன்னணி மாவட்டமாக விளங்கும் கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள அவதானப்பட்டி ஏரியில் படகு சவாரி மற்றும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சிப் பணிகளும், திருப்பத்தூர் மாவட்டத்தில் அழகான இயற்கை சூழலில் ஏலகிரி மலையில் அமைந்துள்ள புங்கனூர் ஏரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையின், செஞ்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ள தாமரைக்குளம் ஏரியில் புதிதாக படகு குழாம் அமைத்தல் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு நவீன வசதிகள் ரூ.5.70 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

காட்சிமுனை அமைத்தல்

மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள நீலகிரி மாவட்டத்தில், கேத்தி மைனல்லா, கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை Hornbill பகுதியில் காட்சி முனை அமைத்தல் மற்றும் கிராம வாழ்வியல் சூழலில், விவசாயம் சார்ந்த தொழில்கள் மூலம் சிறந்த அனுபவங்கள் வழங்குதலை மேம்படுத்தும் விதமாக மற்றும் பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் காரணியாக விளங்கும் கிராமியச் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் நீலகிரி மாவட்டம் உல்லாடா பகுதியில் ரூ.3.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

பெருந்திட்டம் (Master Plan)

கள்ளக்குறிச்சியில் கல்வராயன்மலை, கோயம்புத்தூரில் வால்பாறை, திண்டுக்கல்லில் சிறுமலை, நாமக்கல்லில் கொல்லிமலை, சிவகங்கையில் செட்டிநாடு பகுதி, திருப்பத்தூரில் ஏலகிரி, திருவண்ணாமலையில் ஜவ்வாது மலை மற்றும் ஈரோட்டில் தாளவாடி, ஹாசனூர், குத்தியாலத்தூர் ஆகிய இடங்களில் உள் கட்டமைப்பு மற்றும் சுற்றுலா சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் பிரபலப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுலா பெருந்திட்டம் (Master Plan) ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

மருத்துவச் சுற்றுலா மாநாடு

கடல் கடந்து பல நாடுகளிலிருந்து வருகைபுரியும் நோயாளிகளுக்கு குறைந்த கட்டணத்தில் அதிநவீன மருத்துவ சேவைகளை வழங்கும் இடமாக, சர்வதேச அளவில் தமிழ்நாடு பெயர்பெற்று விளங்குகிறது. மருத்துவச் சுற்றுலா என்பது சுற்றுலாவில் வேகமாக வளர்ந்து வரும் பிரிவுகளில் ஒன்றாகும். இது முக்கிய மருத்துவ சேவைகள் மற்றும் உடல்நலம் பேணும் சுற்றுலா ஆகிய இரண்டையும் உள்ளடக்கி நவீன, பாரம்பரிய மருத்துவ முறைகளுடன் மிகப்பெரிய சந்தையாக உருவெடுத்துள்ளது.

மருத்துவம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலாவுக்கான அமைப்பை வலுப்படுத்தும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சுற்றுலாப் பிரிவுகளை சிறந்த முறையில் மேம்படுத்தவும், பிரபலப்படுத்தவும் அதிநவீன உடல்நலம் பேணும் சிகிச்சைக்கான உள்கட்டமைப்புடன் வரலாற்று சிறப்புமிக்க “சித்தா” மருத்துவ முறையையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. எனவே, இதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலாவினை பிரபலப்படுத்தும் பிரிவுகளில் பணிபுரியும் சுற்றுலா நிறுவனங்கள், பயண முகமைகள், மருத்துவச் சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், மருத்துவ சேவை வழங்கும் மருத்துவமனைகள், ஆரோக்கியச் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் ஆகியோர்களின் ஒத்துழைப்புடன் மருத்துவம் மற்றும் ஆரோக்கியச் சுற்றுலா மாநாடு கோயம்புத்தூரில் ரூ.1.00 கோடி செலவில் நடத்தப்படும்.

நீர் சாகச விளையாட்டுக்கள்

தமிழ்நாடு 1,076 கி.மீ நீளமுள்ள கடற்கரையை கொண்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த கடற்கரைகளில் 13 சதவீதத்திற்கும் அதிகமானதாகும். மாநிலத்தில் சாகசச் சுற்றுலா பிரபலமடைந்து வருவதால், தமிழ்நாட்டில் சாகசச் சுற்றுலா செயல்பாட்டாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. செலவிடும் திறன் அதிகமுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதிலும், நிலையான சுற்றுலாவை வழங்குதலையும், சுற்றுலாப் பொருளாதாரம் வளர்ச்சியடைவதையும் தமிழ்நாடு ஊக்குவிக்கிறது. நீர் சாகச சுற்றுலாவின் பிரிவுகளான பாய் படகு (Sailing), அலைச்சறுக்கு (Surfing), படகோட்டுதல் (Rowing), குறும்படகு (Kayaking) மற்றும் இதர நீர் சாகச விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பணிகளுக்கு ரூ.1.00 கோடி செலவிடப்படும்.

சுற்றுலாப் பெருந்திட்டம்

தமிழ்நாட்டின் பாரம்பரிய சுற்றுலாத் தலமாக விளங்கும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள புதுப்பட்டினம் கடற்கரை மற்றும் சென்னைக்கு அருகில் உள்ள இந்தியாவின் இரண்டாவது பெரிய உப்பு நீர் ஏரியாக விளங்கும் பழவேற்காடு ஏரிப்பகுதிக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா வசதிகள் மற்றும் சிறந்த அனுபவங்களை வழங்கும் வகையில் சுற்றுலாப் பெருந்திட்டம் (Master Plan) ரூ.1.00 கோடி செலவில் தயாரிக்கப்படும்.

கிராமியச் சுற்றுலா - வான்நோக்கு

பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் மக்கள் இயற்கையை ரசிக்க அதிக ஆர்வம் காட்டுவதால் சமீபகாலமாக வான்நோக்கு சுற்றுலா பிரபலமடைந்து வருகிறது. வான்நோக்கு சுற்றுலா என்பது இரவு நேரத்தில் வானத்தைப் பார்ப்பது அல்லது வானியல் தொடர்பான கண்காணிப்பு நிலையங்கள் அமைப்பது போன்ற வசதிகளை உள்ளடக்கியதாகும்.

தமிழ்நாட்டின் அழகிய கிராமப்புறங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு நெஞ்சில் நீங்கா அனுபவங்களை வழங்குகின்றன. கிராமப் பகுதிகளில் உள்ள பண்ணைகள், விவசாய நடைமுறைகள் போன்றவை சுற்றுலா மேம்பாட்டிற்கு வழிவகுப்பதுடன் சுற்றுலாப் பயணிகள் விவசாயிகளுடன் கலந்துரையாடி, ஆழ்ந்த கற்றல் அனுபவங்களைப் பெற ஒரு வாய்ப்பாக அமைகிறது. பண்ணை சுற்றுலாவில் கிராமப்புறக் கலாச்சாரம், உணவு வகைகள், இயற்கை காட்சிகள், துடிப்பான திருவிழாக்கள், கிராமப்புற வாழ்க்கை போன்றவை சுற்றுலாப் பயணிகளுக்கு மறக்க முடியாத அனுபவங்களை வழங்கும். மேலும், கிராமப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில், வலுவான வருவாய் ஆதாரமாக விளங்குகின்றன. எனவே, வான்நோக்கு சுற்றுலா மற்றும் கிராமியச் சுற்றுலாவை மேம்படுத்த சாத்தியமான இடங்களை கண்டறியவும், தொடர்பான திட்டங்களை செயல்படுத்தவும் சாத்தியக் கூறு அறிக்கை ரூ.50 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

தரம் உயர்த்தும் பணிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஊட்டி, குன்னூர், கொடைக்கானல், ஏற்காடு, ஒகேனக்கல், கோயம்புத்தூர், திருச்சி, கிருஷ்ணகிரி, ஓசூர், தஞ்சாவூர், பிச்சாவரம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், திருச்செந்தூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஓட்டல்களில் உள்ள தங்கும் அறைகள், உணவகம், சமையலறை மற்றும் ஒப்பனை அறை ஆகியவற்றை தரம் உயர்த்தும் பணிகள் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சுற்றுலாப் பயணச்சந்தை

தமிழ்நாட்டில் சுற்றுலாவை வெற்றிகரமாக மேம்படுத்தவும் மறக்க முடியாத அனுபவங்களை உருவாக்கி அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை மீண்டும் மீண்டும் வரவழைப்பதற்கு விருப்பமான இடமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவது சுற்றுலாத் துறையின் நோக்கமாகும். தனியார் துறையின் குறிப்பிடத்தக்க பங்களிப்பையும் வெற்றிகரமான சுற்றுலா மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பையும் சுற்றுலாத் தொழில் சார்ந்துள்ளது.

தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சியை மேலும் மேம்படுத்த, பொது தனியார் கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதன் ஒரு முயற்சியாக, தமிழ்நாடு சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துவதற்கும், நாடு முழுவதும் உள்ள சுற்றுலாப் பங்குதாரர்களுடனான கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதற்கும் பல்வேறு மாநில சுற்றுலாத் துறைகள் மற்றும் புகழ்பெற்ற சுற்றுலாத் தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு சுற்றுலாப் பயணச் சந்தை ரூ.1.00 கோடி செலவில் சென்னையில் நடத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் பதிலுரையில் குறிப்பிட்டார்.